மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : இரண்டு கோரிக்கைகளை அவர்கள் வைத்தார்கள். சம்பளத்தைக் அதிகமாக்க வேண்டுமென்பது ஒன்று ; வேலைப் பளுவைக் குறைக்க வேண்டுமென்பது மற்றென்று. வேலைப் பளுவைக் குறைத்து விட்டார்கள் என்பதை அவர்களே ஏற்றுக் கொண்டார்கள். சம்பள விகிதத்தை உயர்த்த வேண்டுமென்பதில் ஏனைய 70,000 பேருக்கும் ஒரே காலத்தில் அறிவிக்க வேண்டுமென்று பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருப்பதால் கூடிய விரைவில் அறிவிக்கப்படும்.

(3) அறிக்கை அளித்தல்

தமிழ்நாடு ஆவணகாப்பகம் பற்றிய பரிந்துரைகள் மேல் அரசு எடுத்த நடவடிக்கை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு பதிவேட்டு அலுவலகம் (தற்போதைய தமிழ்நாடு ஆவண காப்பகம்) பற்றிய அறிக்கையில் அடங்கியுள்ள மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 14-வது அறிக்கையைப் பேரவை முன் வைக்கிறேன்.

(4) அரசினர் மசோதா

தமிழ்நாடு 1970-ம் தொழில் நிறுவனங்கள் (தேசீய பண்டிகை விடுமுறைகள்) திருத்த மசோதா.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசீய பண்டிகை விடுமுறைகள்) திருத்த மசோதாவை இப்பேரவையில் அறிமுகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : இம் மசோதாவை இப் பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் இம் மசோதா அறிமுகப்படுத் தப்பட்டிருக்கிறது.

(5) நடைமுறைக் கேள்வி

திரு. கோ. பூவராகவன் தலைமையில் இயங்கும் கட்சி உறுப்பினர்களுக்கு அவையில் தனி இடம் ஒதுக்காதது குறித்து.

திரு. கே. விநயகம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இங்கு பிரதான எதிர்க்கட்சி காங்கிரஸ். கடந்த மூன்று ஆண்டு களாக எதிர்க்கட்சியில் அமர்ந்து எங்கள் பணியைச் செய்து கொண்டு வருகிறோம். எங்கள் கட்சியில் ஏற்பட்ட குழப்பம், பிளவு காரணமாக எங்கள் கட்சியில் ஒருசிலர் உயர்திரு பூவராகன்